
<u>**பத்திரிகைச் செய்தி அறிவித்தல்**</u>

**காப்புறுதி கைத்தொழில் செயலாற்றுகை – 2013 ஆம் ஆண்டில் 1வது அரையாண்டு**


காப்புறுதிக் கைத்தொழில் 2013 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டில் தனது வளர்ச்சியை தொடர்ந்து செய்து கொண்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடும் போது எல்லாவற்றையும் உள்ளிட்ட மொத்த எழுத்திலான கட்டுப்பணம் (GWP) 9.06 % னால் வளர்ச்சி அடைந்ததுடன் மொத்தச் சொத்துக்கள் 23.9% னால் அதிகரித்துள்ளது.

2012 ஆம் ஆண்டின் முதலாவது ஆறு மாதங்களுக்கான 43,782 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும் போது 2013 ஜுன் மாதம் 30 ஆம் திகதி வரையுள்ள ஆறு மாத காலத்தில் 47,749 மில்லியன் ரூபாவாக இருந்த நீண்ட காலக் காப்புறுதிக்கும் பொதுக் காப்புறுதிக்குமான தொழில்களிலிருந்து எல்லாவற்றையும் உள்ளிட்ட மொத்த எழுத்திலான கட்டுப் பணமானது 9.06% வளர்ச்சியொன்றைக் காண்பித்துள்ளது. பொதுக் காப்புறுதித் தொழிலின் மொத்த எழுத்திலான கட்டுப்பண வருமானம் 28,189 மில்லியன் ரூபாவாகவிருந்தது. (2012 ஆம் ஆண்டின் 1வது அரையாண்டில் 26,017 மில்லியன் ரூபாவாகவிருந்தது). அதே வேளையில் 2013 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டின் மொத்த நீண்ட கால காப்புறுதித் தொழிலின் மொத்த எழுத்திலான கட்டுப்பண வருமானமானது 19,560 மில்லியன் ரூபாவாகவிருந்தது. (2012 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டு ரூபா 17,764 மில்லியன்). இதன்படி பொது காப்புறுதித் தொழிலும் நீண்ட தவணைக்கால காப்புறுதித் தொழிலிலும் மொத்த எழுத்திலான வருமானத்தில் முந்திய ஆண்டின் இணையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது 8.35% யும் 10.11% யும் முறையே காண்பித்துள்ளன.




நீண்டகாலக் காப்புறுதி – சொத்துக்கள் பொதுக் காப்புறுதி – சொத்துக்கள் மொத்தச் சொத்துக்கள்

2012 ஜுன் மாதம் 30 ஆம் திகதியன்று பதிவு செய்யப்பட்ட 279,103 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும் போது காப்புறுதி கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் 2013 ஜுன் மாதம் 30 ஆம் திகதியில் 345,942 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளன. நீண்ட காலக் காப்புறுதித் தொழிலின் சொத்துக்கள் 210,475 மில்லியன் ரூபாவாகவிருந்தது. (2012 ஆம் ஆண்டின் 1வது அரையாண்டு: 171,271 மில்லியன் ரூபா). அதேவேளையில் பொதுக் காப்புறுதி தொழிலின் சொத்துக்கள் 135,467 மில்லியன் ரூபாவாகவிருந்தது. (2012 ஆம் ஆண்டின் 1வது அரையாண்டு ரூபா 107,832 மில்லியன்). இது 2013 ஆம் ஆண்டின் முதலாவது 6 மாத காலப்பகுதியின் முடிவில் முறையே 22.89% யும் 25.63% யும் கொண்ட வளர்ச்சி வீதத்தை காண்பித்துள்ளன.




நீண்ட காலக் காப்புறுதி – சொத்துக்கள் பொதுக் காப்புறுதி – சொத்துக்கள் மொத்தச் சொத்துக்கள்

இச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் பொதுக் காப்புறுதித் தொழிலின் தொழிநுட்ப ஒதுக்கத்தின் சொத்துக்களின் 20% மும் ஆயுட் காப்புறுதி தொழிலின் நீண்ட தவணை காப்பறுதி நிதியத்தின் சொத்தக்களின் 30% மும் அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்யப்படல் வேண்டும். இது சகல காப்புறுதி கம்பனிகளாலும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய கட்டாய தேவைப்பாடு ஒன்றாகும். 2013 ஆம் ஆண்டின் முதலாவது ஆறு மாத காலத்தின் முடிவில் அரசாங்க பிணையங்களில் உள்ள முதலீடு 97,331 மில்லியன் ரூபாவாக இருந்தது. இது நீண்ட கால காப்புறுதித் தொழிலின் மொத்தச் சொத்துக்களின் 46.24% வீதமாக இருக்கின்றது. (2012 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டு: 85,988 ரூபா: 50.21%.)

அதே வேளையில் பொதுக் காப்புறுதித் தொழிலின் மொத்தச் சொத்துக்களின் அத்தகைய முதலீடானது 26,994 மில்லியன் ரூபாவாக இருந்தது. ( 2012 ஆம் ஆண்டின் 1வது அரையாண்டு: 31,916 ரூபா: 29.60%). இதற்கமைவாக ஆயுட்காப்புறுதித் தொழிலின் பொதுக்

காப்புறுதித் தொழிலினதும் நீண்ட காலக் காப்புறுதி நிதியத்தினதும் தொழிநுட்ப ஒதுக்கத்தின் சொத்துக்களின் மொத்த முதலீடு 124,325 மில்லியன் ரூபாவாக இருந்தது. 2013 ஜூன் மாதம் 30 ஆம் திகதியில் இது 35.94% (2012 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டு: 117,904: 42.24%) வீதமாக இருந்தது. இது இச் சட்டத்தினால் வேண்டப்படும் அரசாங்க ஆவணங்களிலான முதலீட்டின் வேண்டப்படும் தொகையை விட கூடுதலானதாகவிருந்தது.

இச்சட்டத்தின் 98 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் காப்புறுதிக் கம்பனிகளினால் வழங்க மறுக்கப்படும் காப்புறுதிதாரர்களின் மனக்குறைகளைப் பற்றி இச்சபையானது விசாரணை செய்கின்றது. இக் காலப் பகுதியில் இலங்கை காப்புறுதி சபையானது 122 முறைப்பாடுகளை விசாரணை செய்துள்ளது.

2013 ஜூன் மாதம் 30 ஆம் திகதியில் இருந்தவாறு இலங்கை காப்புறுதிச் சபையினால் பதிவு செய்யப்பட்ட 22 கம்பனிகளில் 12 கம்பனிகள் கூட்டுக் கம்பனிகளாகவும் ( பொது மற்றும் நீண்ட கால காப்புறுதி தொழில்கள் ஆகிய இரண்டையும் கையாளுகின்றது.) மற்றும் ஏழு கம்பனிகள் பொதுக் காப்புறுதித் தொழிலை நிறைவேற்றுவதற்காகப் பதிவு செய்யப்பட்டவைகளாகவும் மூன்று கம்பனிகள் நீண்ட கால (ஆயுள்) காப்புறுதி தொழிலை நிறைவேற்றுவதற்கும் பதிவு செய்யப்பட்டுள்ளன. வரையறுக்கப்பட்ட செலிங்கோ தக்காபுல் கம்பனியானது 2009 ஆகஸ்ட் 5 ஆம் திகதியிலிருந்து காப்புறுதித் தொழில் செய்வதிலிருந்து தடை செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் 82 ஆம்பிரிவின் நியதிகளின் பிரகாரம் இலங்கைக் காப்புறுதி சபையுடன் பதிவு செய்யப்பட்டுள்ள 57 காப்புறுதி தரகுக் கம்பனிகள் பிரதானமாக பொதுக் காப்புறுதித் தொழிலில் தீவிரமான ஈடுபாட்டுடன் காப்புறுதி தரகுத் தொழிலில் ஈடுபட்டுள்ளன. பொதுக் காப்புறுதித் தொழில் மூலமாக பிறப்பிக்கப்படும் கட்டுப்பண வருமானமானது 6580 மில்லியன் ரூபாவாக இருந்தது. (2012 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு ; 6193 மில்லியன் ரூபா) அதேவேளையில் நீண்ட கால காப்புறுதித் தொழில் மூலமாகப் பிறப்பிக்கப்பட்ட கட்டுப் பணமானது 89 மில்லியன் ரூபாவாக இருந்தது. (2012 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டு ; 120 மில்லியன் ரூபா) காப்புறுதித் தரகுக் கம்பனிகள் மூலமாக பொதுக்காப்புறுதித் தொழிலினாலும் மற்றும் நீண்டகால காப்புறுதித் தொழிலினாலும் பிறப்பிக்கப்பட்ட மொத்தக் கட்டுப்பண வருமானமானது 2013 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டில் 6670 மில்லியன் ரூபாவாக இருந்தது. இது 2012 ஆம் ஆண்டில் இதே காலப்பகுதியில் 6313 மில்லியன் ரூபாவாக இருந்தது. இதன்படி காப்புறுதித் தரகுத் தொழில் மூலம் பிறப்பிக்கப்பட்ட மொத்த கட்டுப் பண வருமானமானது 2013 ஆம் ஆண்டின் முதலாவது அரையாண்டில் முந்திய ஆண்டில் இணையொத்த காலப் பகுதியுடன் ஒப்பிடும் போது 5.64% வீதமான வளர்ச்சி காண்பித்துள்ளன.

2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்பறுதிக் கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்கு விதியின் நியதிகளின் பிரகாரம் காப்புறுதிக் கைத்தொழிலானது இலங்கைக் காப்புறுதிச் சபையினால் ஒழுங்குறுத்தி மேற்பார்வை செய்யப்படுகின்றது. இலங்கைக் காப்புறுதிச் சபையானது

இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின் பிரகாரம் இலங்கைக் காப்புறுதிக் கைத்தொழிலுக்கு விவேகமான ஒழுங்குறுத்துனர் என்ற வகையில் வழிகாட்டலையும் நெறிப்படுத்தலையும் வழங்குகின்றது.

குறிப்பு: 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி கைத்தொழில் சட்டத்தின் ஒழுங்கு விதியின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கைக் காப்புறுதிச் சபையினால் வழங்கப்படும் காப்புறுதிச் சான்றிதழின் அதிகாரத்தின் கீழ் அன்றி இலங்கையில் எந்த நபர் ஒருவரும் காப்புறுதித் தொழிலையோ அல்லது காப்புறுதித் தரகுத் தொழிலையோ செய்யக்கூடாது என பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. எனவே அதிகாரம் அளிக்கப்பட்ட காப்புறுதிக் கம்பனிகளுடனும் காப்புறுதித் தரகுக் கம்பனிகளுடனும் மட்டுமே காப்புறுதி கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய வேண்டுமென இத்தால் பொது மக்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது. அதிகாரமளிக்கப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதித் தரகுக் கம்பனிகள் மீதான தகவல்களைப் பெறுவதற்கு சந்தை அபிவிருத்தி, வெளிவாரித் தொடர்புகள் பிரிவு, இலங்கைக் காப்புறுதிச் சபை, மட்டம் # 11, கிழக்குக் கோபுரம், உலக வர்த்தக மையம், கொழும்பு 01 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். அல்லது கீழே தரப்பட்டுள்ள விதத்தில் எமது இணையத்தளத்திற்கு வருகை புரியவும்.


| | |
|---|---|
| தொலைபேசி: 011 2396184 – 9 | தொலைநகல்: 011 2396190 |
| மின்னஞ்சல்: info@ibsl.gov.lk | இணையத்தளம்: www.ibsl.gov.lk |

இலங்கைக் காப்புறுதிச் சபை
மட்டம் # 11
கிழக்குக் கோபுரம்
உலக வர்த்தக மையம்
கொழும்பு 01